செய்தி வெளியீடு எண்:295 நாள்:09.06.2009

## செய்தி வெளியீடு

## மத்திய – மாநில உறவுகள் குறித்து ஆராய்வதற்காக திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் தலைமையில் தமிழக அரசு அமைத்த குழுவின் அறிக்கை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று வழங்கப்பட்டது!

மத்திய – மாநில உறவுகளை ஆய்வு செய்வதற்காக 2005ஆம் ஆண்டு ஒரு ஆய்வுக் குழுவினை உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் பூஞ்சி தலைமையில் மத்திய அரசு அமைத்தது. மத்திய–மாநில உறவுகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கோடு இக்குழு மாநில அரசுகளிடம் கருத்துகளைக் கேட்டது. சட்டமன்ற, நிருவாக, நீதித் துறை தொடர்பாக 84 கேள்விகளைத் தொகுத்து, அக்கேள்விகளுக்குரிய விடைகளை வழங்குமாறு இக்குழு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டது.

இதுகுறித்து ஆய்வதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலத் திட்டக் குழு துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் தலைமையில் தமிழக அரசின் உள்துறைச் செயலர், நிதித்துறைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர், பொதுப்பணித் துறைச் செயலர், வணிக வரித் துறைச் செயலர், சட்டத் துறைச் செயலர் ஆகியோருடன் மூத்த வழக்கறிஞர் திரு. இரா. விடுதலை அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுவினை 19.2.2008 அன்று நியமித்தார்.

இக்குழு தனது உறுப்பினர்களிடமும், பல்துறை வல்லுநர்களிடமும் கலந்துரையாடி பல்வேறு கருத்துகளைப் பெற்று அவற்றின் அடிப்படையில் அறிக்கை ஒன்றினை உருவாக்கியது.

திராவிட முன்னேற்றக் கழக அரசினால் மத்திய–மாநில உறவுகளைச் சீரமைப்பதற்காக 1969ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட நீதியரசர் இராஜமன்னார் குழுவின் முக்கியப் பரிந்துரைகளும், 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானமும் இவ்வறிக்கையினுடைய இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களையும், நிதிப் பகிர்வினையும் அளிக்க வேண்டுமென்று பல வல்லுநர்களின் கருத்துகளையும், முன்னுதாரணங்களையும், நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டி, உண்மையான கூட்டாட்சி இயலை இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று இவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பேராசிரியர் மு.நாகநாதன் இன்று (9.6.2009) வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, குழு உறுப்பினர்களான நிதித் துறைச் செயலர் திரு. கு. ஞானதேசிகன், பொதுப்பணித் துறைச் செயலர் திரு. எஸ். இராமசுந்தரம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர் திரு அஷோக்வர்தன் ஷெட்டி, மூத்த வழக்கறிஞர் திரு. இரா. விடுதலை ஆகியோர் உடனிருந்தனர்.

****

**வெளியீடு**:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9